புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# இலக்கியத்தில் கன்னிமரி

**த.ஜெயசீலி**
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி) திருப்பத்தூர்*
*திருப்பத்தூர் மாவட்டம் - 635 601.*

**முனைவர் பொன். செல்வகுமார்**
*ஆய்வு நெறியாளர் & மேனாள் தமிழ்த்துறைத் தலைவர்*
*தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி) திருப்பத்தூர்*
*திருப்பத்தூர் மாவட்டம் - 635 601.*

*கிறித்தவ சிற்றிலக்கியங்களில் வெளிப்படும் சமுக உணர்வுகள், இறைநம்பிக்கைகளை இந்திய திருநாட்டில் வாழும் பல்வேறு மொழி, இன, சமய, பழக்கவழக்கங்கள், பண்பாட்டுப் பின்புலங்களுக்கு ஏற்ப கிறித்தவ சிற்றிலக்கியங்கள் ஒருவித தேவியல் மரபு (Theological Tradition) அல்லது செந்நெறி மரபு (Classical Tradition) இவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு பல்வேறு கிறித்தவ தமிழ் கவிஞர்களின் படைப்புகளில் பெரும்பான்மையானவை மொழிநடையால் என்றும் உயர்ந்து நிற்கின்றன. யாப்புக்கும், சொல்லாட்சிகளுக்கும் முக்கியத்துவம் தரப்பட்டு போற்றுமளவிற்கு சிற்றிலக்கியங்கள் வாழ்வியலை எடுத்துக்கூறுகின்றன. ஊனுருக, உள்ளங்கசிந்துருக, இறைவனையும், திருச்சபையினையும், அதன் கட்டளைகளையும் உயர்ந்ததாகக் கருதப்படும் காப்பியங்களாலும் அழகிய சிற்றிலக்கியங்களாலும், இறைவனையும், போதனையும் தமிழ் மண்ணின் பண்பாட்டு கூறுகளோடு நெருக்கமாகப் பிணைத்து, அதை தமிழ் சமயமாக மாற்றி வெற்றி முரசு கொட்டினர் நம் சான்றோர்கள் குறவஞ்சி, பிள்ளைத்தமிழ், அம்மானை, கலம்பகம், உலா, நொண்டி நாடகம், தூது போன்ற பிரபந்த வகைகளைத்தழுவி எண்ணற்ற கிறித்தவச் சிற்றிலக்கியங்கள் தமிழ் மண்ணின் கலாச்சாரத்தோடு இணைத்து, வளர்த்து, தமிழை உச்சியில் வைத்து அழகு பார்க்கின்றனர். ஏற்றப்பாட்டு, ஏசல், குறத்திப்பாட்டு, போன்ற பல்வேறு இலக்கியங்கள் நாட்டுப்புறப்பாடல் வடிவங்களில் அமைந்திருக்கின்றன. மேலும் அறநெறிப் பாடல்களின் வடிவங்களிலும் இலக்கியங்கள் வளர்ந்துள்ளன.*

## *முன்னுரை*

*வரலாற்றின் முதுகில் நிரந்தரமாக அமர்ந்து கொண்டு கி.மு – கி.பி என்ற வரலாற்று வேறுபாட்டை ஏற்படுத்திய நாசரேத்தூரின் நாயகன் "இயேசுவின் தாய்" அன்னை மரியாவுக்கென இயற்றப்பட்ட பாடல்களும் எழுதப்பட்ட நூல்களும், கட்டுரைகளும் இலக்கியங்களும் இன்னும் பல ஆயிரம் உண்டு. அதைவிட மேலாக வழங்கப்பட்ட உரைகளோ பல கோடி உண்டு. அன்னை*

மரியா பற்றி ஏதாவது சிந்தனை பகிரப்படாத உலகத்தின் மூலையில் இன்றளவும் ஒலித்துக் கொண்டுதானிருக்கிறது. மரியாவைப் பற்றி எத்தனையோ தமிழ் நூல்கள் வந்துவிட்டன. அவளின் மாண்பை அறிய முயலுவோருக்கெல்லாம் சிறந்த அன்னை. பெண்மையின் சிறப்பைக் கற்றுக் கொள்ள நினைப்போருக்கெல்லாம் பெண்மையின் மகுடம். புரட்சியாளர்களாய் வாழ நினைப்போருக்கெல்லாம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டிய நாசரேத்தூர் சாமானியப் பெண. பெண்மையின் புரட்சியாளர். இயேசு தன் சீடர்களை அழைப்பதற்கு முன்னரே கடவுளால் நேரடியாக அழைக்கப்பட்ட முதல் சீடர். கானாவூர் திருமணத்திலிருந்து தொடங்கியப் பிறரன்புப் பணியை இன்றளவும் காட்சிகள் வழியாகத் தொடரும் மகிமையின் தாய். இவரின் 'ஆம்' எனும் பதில் மீட்பின் வரலாற்றுப் போக்கை மாற்றியது. இறைவாக்கையும் எடுத்துக்காட்டுகின்றது. அன்னை மரியாவை அறியாதவர்களும்கூட எளிதாக அறிந்து கொள்ளவும், அவரில் நம்பிக்கையை ஆழப்படுத்தவும், நல்வழி காணவும் கிறித்தவச் சிற்றிலக்கியங்கள் உதவுகின்றன. வாழ்வில் இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவே தன்னையே முழுவதும் அர்ப்பணித்து முதல் இடம் வகிப்பவர் கன்னி மரியாள். இலக்கியங்களில் கன்னி மரியாள் என்னும் தலைப்பில் அவளைப் பற்றி அறிந்து கொள்ள ஆய்வுக் கண்ணோட்டத்தில் இக்கட்டுரையானது எழுதப்பட்டு பின்வரும் தலைப்புகளில் அமைகிறது.

1. கன்னி மரியின் பிறப்பு
2. தாய்மையின் சிறப்பு
3. பாவம் நீக்கப் பிறந்தவள்
4. விண்ணுல அரசி
5. மண்ணுலக அரசி
6. மண்ணுலகை விண்ணுலகமாக மாற்றக்கூடியவள்
7. மனுக்குலத்தின்தாய்
8. மகிழ்ச்சியின் காரணமாக இருப்பவள்
9. அலகையினை நசுக்கியவள்
10. பெண்களுக்குள் பேறுபெற்றவள்
11. பேரறிவு உடையவள்
12. ஆன்மாவிற்கு இளைப்பாறுதல் தருபவள்
13. இயற்கை மற்றும் உயிரினங்களை காப்பவள்
14. புரட்சிப்பெண்
15. தூய ஆவியால் நிரப்பப்படுதல்
16. துறவிகளின் அடைக்கலம்
17. கன்னிமரிக்கு புகழ்மாலை

*1. கன்னி மரியின் பிறப்பு*

*சுவக்கீன் அன்னம்மாள் தான் அன்னை மரியாவை பெற்றெடுத்த பேறு பெற்ற பெற்றோர். நாசரேத்தூர் மரியாவின் ஊர் சென்ம பாவம் இன்றி பிறந்தவர் மரியா. பாலஸ்தீன் நாட்டில் பாமரப்பெண்ணாக யூதகுலமாகிய கடலில் பிறந்த, கன்னித்தன்மை கெடாது, சங்கு போன்ற தூய்மையானவள் தான் கன்னி மரியாள் என ஆசிரியர் வீரமாமுனிவர் திருக்காவலூர்க் கலம்பகத்தில் குறிப்பிடுகின்றார். இதனையே*

பாறகடற் கன்னிச்சங் கிங்க ணரிதிற் பயந்தளித்த
மேற்கடற் றேவ திருமுத்தம் பூண்டு விரிதமிழ்ப்பா
நாற்கடற் றொல்லந் துறைசேர்ந்து காலலூர் நங்கையெனு
நூற்கடற் றேவமு தள்ளி நுகர்வ னுவன்றிடவே.
*(திருக்காவலூர் கலம்பகம் ப.1 பா1)*

*மரியா இளம் மங்கையாய் இருந்த போது சூசை என்பவரை மணமுடிக்க நிச்சயதார்த்தம் செய்யப்பட்டது. அவ்வேளையில் ஆறாம் மாதத்தில் கபிரியேல்தூதர் மரியாவுக்கு தோன்றி "அருள்நிறைந்தவரே வாழ்க! ஆண்டவர் உம்முடனே! பெண்களிலெல்லாம் பேறு பெற்றவர் நீர்.! ஏனென்றால் உமது திருவயிற்றிலிருந்து உலக மீட்பர் பரிசுத்த ஆவியின் வல்லமையால் பிறக்க போகிறார்" என்றார். மரியாவுக்கு ஒரே கலக்கம். இறைசித்தத்திற்கு பணிவுடன் தன்னையே கையளித்தார். அதனால் இயேசுவின் தாயாகி பெண்களுள் பேறுபெற்ற நிலையை அடைவதற்கு பாவமின்றி அமலஉற்பவியாக பிறந்ததே காரணம்.*

*2. தாய்மையின் சிறப்பு*

*மனிதவடிவம் கொண்டு ஒப்பற்ற இறைவன் கன்னிமரியிடம் பிறப்பதற்கு மற்ற பெண்கள் கொள்ளும் கருவைப்போல் அல்லாமல் தூய ஆவியால் கருவுற்று கன்னித்தாய் என்ற மேன்மை நிலையை அடைகின்றாள். இதனையே*

*மானாபி மானனுக்கு வானனுக்கு மங்களம்*
*வளர்கலைக் கியானனுக்கு ஞானனுக்கு மங்களம்*
*கானானு தேயனுக்குக் கன்னிமரி சேயனுக்கு*
*கோனார் சகாயனுக்குக் கூறுபெத்த லேயனுக்கு - சீரேசு*
*(பெத்லகேம் குறவஞ்சி ப.35 பா.34)*
*அருள்நிறைந்த மாமரியே நீர்*
*ஆண்டவன் ஆசிபெற்றவரே*
*கருவுற்று நீர்பெறும் குழந்தை*
*கடவுள் மகனே கும்மியடி*
*(அருள்மொழிக் கும்மி ப.29 பா.57)*

*என தாய்மையின் சிறப்பினை அருள்மொழி கும்மியில் ஆசிரியர் மணிவளன் குறிப்பிடுகிறார்.*

*3. பாவம் நீக்கப் பிறந்தவள்*

*ஆதாம் ஏவாள் உலகத்தில் உண்டான குற்றத்தை நீக்குவதற்காகச் சொல்லி முடியாத இறைவன் மனதில் பாவம் நீக்க வாக்களிக்கப்பட்டவள் கன்னிமரியாள். இதனால் நீண்ட காலம் நஞ்சினை வெளியிட்டு இம்மண்ணுலகைத் துன்புறுத்திய நீண்ட பாம்பைப்போன்ற கொடிய ஆட்சி நடுங்கியது. இதனையே*

நெடுங்காலம் நஞ்சுமிழ்ந்து

நிலம்வதைத்த நீளரவக்
கொடுங்கோன்மை கொதித்த
தென்னை? குமராநீ பிறந்ததுமே
கொடுங்கோன்மை விழுத்தவந்த
குணக்கோவென்று உனைத்தெரிந்து
நடுங்கியதே கொடுங்கோன்மை
நலிந்துவரல் கண்கூடே.
*(திரு.வி.க.வின்.கிறிஸ்துவின் அருள்வேட்டல் ப.22 பா.4)*

*ஏதேன் தோட்டத்தில் ஆதாமும் ஏவாளும் வெட்கப் படுமாறு செய்த கீழ்ப்படியாமையாகிய தீமையை கன்னிமரியாள் தனது பிறப்பினால் போக்கினாள். ஆதாம் கீழ்ப்படியாமையினால் நான்கு வகையான குற்றங்களைச் செய்தான். அந்தக் குற்றங்கள் நீங்கத்தக்கதாக இறைவாக்கினர்கள் எழுதியவாறு சிறந்த உடலை உடைய இறைமகன் இயேசுவின் தாய் கன்னிமரியாள் மற்றும் யோசேப்பு இருவரையும் கண்டவுடன் பாவம் நீங்கியதாக திரு.வி.க.வின் கிறிஸ்துவின் அருள் வேட்டல் பாடுகிறது.*

*4. விண்ணுல அரசி*

*விண்ணுலகில் உள்ளோர் வானவர்கள் அனைவரும் வியந்துப் போற்றக்கூடியவள் கன்னிமரி. மேலும் கன்னிமரி இடும் கட்டளைகளை நிறைவேற்றக்காத்துக் கொண்டு இருப்பதாக ஆசிரியர் வீரமாமுனிவர் புகழ்கின்றார்.*

*(1) விண்மீன் கூட்டங்கள் அழகு செய்தல்*

*விண்ணுலக அரசியான கன்னிமரியாளை விண்மீன் கூட்டங்கள் சூழ்ந்து நின்று அழகு செய்கின்றன எனவும் அவளது தலையில் மணிமுடியாக 12 விண்மீன்கள் ஒளிர்விடுகின்றன எனவும் குறிப்பிடுகின்றது. இதனையே*

தண்சுடர்க்கான் மதிக்குழவி தாங்கியபூ வடிவிளங்கத்
தெண்சுடர்க்கா லுடுவணைந்த திருமுடிகொள் சிரமிமைப்பப்
பனியுயிர்த்து மனங்குளிர்க்கப் பருதியுடுத் துடலிலங்கத்
தனியுயிர்த்து மரசணியாத் தரப்பதுநின் விருதாமோ.
*(திருக்காவலூர் கலம்பகம் ப.13 பா1)*

*(2)ஆடை அணிகலன்கள்*

*கன்னிமரி விண்ணுலக அரசி என்பதை வெளிப்படுத்தும் விதமாக அவளது தோற்றமும் வருணிக்கப்படுகிறது. குளிர்ந்த நிலவு இளம்பிறையாக மரியாளின் பாதங்களை அழகுப்படுத்துகின்றது. விண்மீன் கூட்டங்கள் அவளைச்சுற்றி ஒளிர்கின்றன. சூரியனை ஆடையாகவும் உடுத்தியிருப்பதாக கிறித்துவச் சிற்றிலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.*

*5. மண்ணுலக அரசி*

*சோழ நாட்டிலுள்ள காவிரி ஆற்றின் கிளை ஆறாகிய கொள்ளிடத்தின் வடக்குக்கரையின் மேல் கிளைகள் மிகுந்த நிழல் தரும் சோலையில், அரசிக்கு உரிய சின்னமாகிய நீண்ட சிங்கக்கொடியுடன,; திருக்காவலூரில் அழகிய ஆலயத்தில் அமர்ந்து அருள்பாளிப்பதாக சிற்றிலக்கியங்கள் சிறப்பிக்கின்றன. இதனையே*

*உன்ளுருவாக் கவசமென உத்தரிகத் துடன்மருடீர்*
*தள்ளுருவா மணிமாலை சிறந்தேந்துங் கைநீட்டி*
*வாய்பொய்யா மறைத்தியாம் வடதிசையே தனிநோக்கித்*
*தாய்பொய்யா வடைக்கலமே தருவதுநின் புகழாமோ.*
*(திருக்காவலூர் கலம்பகம் ப.14 பா3)*

*இவ்வாறு மூன்று உலகங்களையும் ஆளும் மண்ணுலக அரசியாக கன்னிமரியாள் மக்களுக்கு எல்லா வளங்களையும் வாரி வழங்குவதாக கிறித்துவச் சிற்றிலக்கியங்கள் விளக்குகின்றன.*

*ஆடை அணிகலன்கள்*

*மண்ணக அரசியாக கன்னிமரி உடலுக்குள் ஊடுருவிச்செல்ல முடியாது தடுக்கும் கவசமாகிய மேல் ஆடையுடன் அறியாமையை நீக்குகின்ற தெளிந்த வடிவில் அமைந்த மணிகளைக் கொண்ட செபமாலையை கையில் ஏந்தி, அருள் கரத்தை நீட்டி, பொய்யாகாத திருமறை தோன்றிய, வடக்குத் திசையை நோக்கி, கன்னித்தாயாக, அடைக்கலம் தரும் மண்ணக அரசியாக தோன்றுகிறாள்.*

*6. மண்ணுலகை விண்ணுலகமாக மாற்றக்கூடியவள்:*

*பெண்களுக்குள் சிறந்தவளான கன்னிமரி தனது தனிப்பட்ட பிறப்பின் மேன்மையால் மண்ணுலகில் ஆட்சிப்புரிகின்றாள் அவளது ஆலையங்களில் மலர்களின் மணமும் நறுமணப்புகையும் எழும்பி விண்ணுலக மகிழ்ச்சியினை தருகின்றது. இதனையே*

*தாண்மலரே தலையரும்பத் தரும்பணிகேட் டுளம்பனிப்பச்*
*சேண்மலரே உன்வரத்தாற் றிருக்கடலூ டினிதாழ்ந்து*
*வானவருங் கரைகாணா மனந்தேறற்றாப் புன்பாவா*
*லீனவருள் யானீந்தற் கியைந்ததுநின் றிறமாமோ.*
*(திருக்காவலூர் கலம்பகம் ப.15 பா.5)*

*7. மனுக்குலத்தின் தாய்*

*இவ்வுலகிலுள்ள எல்லா உயிரினங்களுக்கும் தாயாக விளங்கும் கடவுள் செம்மையான தன்மையுடைய ஒப்பற்ற தாயின் வளமையான கையில் வளர்ந்தார. எனவே இறைவனின் தாயாகவும் மனுக்குலத்தின் தாயாகவும் கன்னிமரி திகழ்கின்றாள். இதனையே*

*தாரணி தன்னில் தலம்புல மின்றியோர் சத்திரத்தில்*
*பேரணி பெத்தலே கேமில் பிறந்தி பேருலகின்*
*காரிரு ணீக்கிய வித்தக சூரிய கான்முளையாய்க்*
*கோரணி பாவிகட் காய்ப்பசு மாடடை கொட்டிலிலே.*
*(திருக்குமரன் அந்தாதி ப.14 பா.20)*

*என ஆசிரியர் ஜோயல் டேவிட்சன் என்பவர் திருக்குமரன் அந்தாதியில் உறுதிப்படுத்துகிறார்.*

*8. மகிழ்ச்சியன் காரணமாக இருப்பவள்*

*விண்ணுலகில் இருப்பவர்களைவிட கண்ணி மரியாள் மிகவும் மகிழ்ச்சிக்கு உரியவளாகவும,; துன்பம் மிகுந்த இந்த உலகத்தை காத்து இருப்பதால் மகிழ்ச்சியின் காரணமாகவும் விளங்குகின்றாள் என்பது உறுதி. இதனையே*

*உமது வரவால் எனது வயிற்றினுள்*
*குழந்தை துள்ளிற்று அக்களிப்பால்*

*(அருள்மொழிக்கும்மி ப.33 பா.65)*
*கானாவூர்த் திருமணம் சிறந்திட அங்குக்*
*கணத்தில் புதுமை செய்தாரே*
*(அருள்மொழிக்கும்மி ப.46 பா.92)*
*ஐந்து அப்பந்தனை ஐயாயிரம் பேர்க்கு*
*ஆம்சமாய் கொடுத்த ஆண்டவர்க்குச்*
*(அருள்மொழிக்கும்மி ப.47 பா.94)*

*அருள்மொழிக்கும்மி என்னும் கிறித்துவச் சிற்றிலக்கியத்தில் அருள்தந்தை சி.மணிவளன் அவர்கள் எலிசபெத் அம்மாளின் கருவில் இருக்கும் குழந்தை மகிழ்வால் துள்ளியதாகவும், கானாவூர் திருமணத்தில் தண்ணீரை ரசமாக்கி மகிழ்வை தந்ததாகவும,; அப்பங்களை பலுகச் செய்த இயேசுவை பெற்றெடுத்த தாயாகவும் இருப்பதாக குறிப்பிடுகின்றார்.*

*9. அலகையினை நசுக்கியவள்*

*பெரிய இவ்வுலகின் மிக்க அறியாமை இருளை நீக்கிய பேரறிவுச் சூரியனையே குழந்தையாக, பாவிகளை மீட்பதற்காக, மாடடைக் குடிலினிலே, தங்குமிடமின்றி, ஒரு சத்திரத்திலே அழகிய ஊராகிய பெத்தலகேமில் கன்னி மரியாள் பெற்றெடுத்தாள். அவளது குழந்தையை அலகை தீண்ட முயல்வதாகவும் கன்னிமரியாள் அதன் தலையை நசுக்கியதாகவும் கிறித்துவ சிற்றிலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.*

*கன்னி வழிமலர்ந்த கற்பகமே என்னுயிரே*
*முன்னி உனைஅணைந்தேன் முன்.*
*(திரு.வி.க.வின் கிறிஸ்துவின் அருள் வேட்டல் ப.13 பா.2)*

*என திரு.வி.க. அலகையின் தலையை நசுக்கியவள் கன்னிமரியே என சான்று பகர்கின்றார்.*

*10. பெண்களுக்குள் பேறுபெற்றவள்*

*கன்னிமரியாள் பூமியில் பிறந்த பெண்களுக்குள் இறைவனின் பார்வையில் சிறப்பாக தேர்ந்தெடுக்கப் பட்டு இயேசுவை பெற்றெடுத்ததால் பெண்களுக்குள் பேறுபெற்றவளாக இருக்கின்றாள். எனவே அவளது புகழ்பாடி ஊஞ்சலை ஆட்டவும், திருமறைநூலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நன்மைதரும் தலமாகிய வீட்டின் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளாகிய கதவுகளை மூடி, ஒழுக்கமாகிய தாழ்ப்பாள்களை வரைந்து பூட்டிடக்கூறுகிறது திருக்காவலூர் கலம்பகம்.*

*ஆட்டியருட் செல்வியெனுந் தேவ தாயா*
*மருங்கன்னி நலம்பாடி யாட்டி ருசல்*
*காட்டியநற் றவவீட்டிற் பொறிக ளென்னுங்*
*கதவடைத்தே யொழுக்கத்தாட் கடுகிப் பூட்டி*
*மீட்டியதே வருள்விரித்த வுளத்தின் மஞ்ச*
*மேந்தியவன் பெனுங்கயிறிட் டாட்டி ருசல்*
*(திருக்காவலூர் கலம்பகம் ப.79 பா.62)*

*தாவீதின் அரச குலம் சிறக்க மனித வடிவம் கொண்டு பெண்களில் சிறந்த அன்னைமரி கருவில் வியக்கத்தக்க முறையில் இறைமகன் பிறந்தார். இதனையே*

*தாவீ தேந்தல் கோத்திர சாயல் கன்னியா ஸ்திரீமிக்க*
*ஆவைமரி கற்பமுற்று அற்புதமாய உற்பவித்து – தேவ.*
*(பெத்லகேம் குறவஞ்சி ப.58 பா.78)*

*என ஆசிரியர் தஞ்சை தே. வேதநாயக சாஸ்திரியார் கூறுகிறார். இதனையே*

பெண்களில் ஆசிபெற்றவரே நான்
பேறுபெற்றேன் உம் வரவால்
ஆண்டவரின் தாய் என்னிடம் வர
நான்தான் யாரம்மா? கும்மியடி
(அருள்மொழிக்கும்மி ப.32 பா.64)

என ஆசிரியர் மணிவளன் மொழிகின்றார்.

11. பேரறிவு உடையவள்

மனிதகுலத்தில் பிறந்தவர்களுள் கன்னிமரி மிகவும் கற்று அறிவு நிறைந்தவளாக அறியப்படுகிறாள். தூய ஆவியின் செயலை வியந்து பாடுகிறாள். பழைய வரலாற்று நிகழ்வுகளில் இறைவனி;ன் வல்லமையான செயல்களை கற்று தேர்ந்தவளாக இருக்கிறாள். கல்வி நிறை சான்றோர்களின் அன்பிற்கு உரியவள். நல்ல வாழ்விற்கான நெறிமுறைகளைக் காட்டுபவளாக போற்றப்படுகிறாள். இதனையே

எங்ஙனம் இது ஆகுமென்று மரி
கபிரியேல் தூதரைக் கேட்டதோடு
மங்காத கன்னி நான் ஆயிற்று
மகப்பேறு உண்டோ கும்மியடி
(அருள்மொழிக்கும்மி ப.29 பா.58)

12. ஆன்மாவிற்கு இளைப்பாறுதல் தருபவள்

அடைக்கல அன்னை ஆன்மாவிற்கு இளைப்பாறுதல் தருபவளாகவும், இறந்தபின்பு ஆன்மாவினை இறைவனிடம் கொண்டு சேர்ப்பவளாகவும் இருக்கின்றாள். இதனையே

நொய்யும் படியவரின் காலை
நொண்டியாகும்படி சண்டை செய்வாய்
பொய்யாது என விளம்பி வுந்தன்
பூவையின் பக்கமாய் மேவினரே
(ஞான நொண்டி நாடகம் ப.85 பா.4)

பாவம் புரியக் காரணமான அலகையின் தலையை மிதித்து, சாவை வென்று, மனுக்குலத்தை இறைவன் பாதம் சேர்ப்பதால் கன்னிமரி ஆன்மாக்கள் இளைப்பாரும் இடமாக இருக்கின்றாள் என ஆசிரியர் தஞ்சை வேதநாயக சாஸ்திரியார் கூறுகிறார்.

13. இயற்கை மற்றும் உயிரினங்களைக் காப்பவள்

இயற்கையை பாதுகாப்பவளாக சோலைகள் நிறைந்த இடங்களில் கோவில் கொண்டாள். மேலும் உயிரினங்கள் அபயக்குரல் எழுப்பும் போது அடைக்கலம் தருபவளாகவும், துன்பத்தைப் போக்குபவளாகவும் காட்சியளிக்கின்றாள். இதனையே

பதியுகிர்வெம் பருந்தெடுப்பப் பசுங்கிள்ளை பதைத்தழைப்ப
வதியருகொண் டுதவியதே வனமாளுந் திருக்காவற்
றுதியருளொயண் குயில்பாடத் துணையாடு மயிலலல்லான்
மதிமருண்மற் றொருமதங்கி மருவாதிங் கெழுந்தகையே
(திருகாவலுர் கலம்பகம் ப.106 பா.94)

மேலும்

தயாபர னாகித் தமியேனைச் சைவச் சழக்கினின்று
பொயாநெறி காட்டிப் புரந்தனை யால்மிகப் புல்லறிவேன்
உயாவழி யுன்னுமச் சாத்தான் றலையை யுறநசுங்கச்

*செயாநின்ற வெற்றி சிறந்திடு ஞான தினகரனே*
*(திருக்குமரன் அந்தாதி ப.15 பா.22)*

*என ஆசிரியர் ஜோயல் டேவிட்சன் திருக்குமரன் அந்தாதி எனும் கிறித்துவ சிற்றிலக்கியத்தில் இயற்கையை அன்பு செய்த கன்னிமரியாள் ஏழ்மையான மாடடைக்குடிலினில் கால்நடைகளும், விலங்களும் சூழ்ந்திருக்க தீவனத்தொட்டியினில் தனது மகனை கிடத்தி உலகிற்கு உணவளிக்கும் தாயாக காட்டியிருப்பது சிறப்பு.*

*14. புரட்சிப்பெண்*

*யூதகுலத்தில் பெண்களை அடக்கி ஆண்ட சூழலில் சுதந்திரப்பெண்ணாக முடிாவெடுக்கத்தெரிந்தவள் கன்னிமரி. திருமணத்திற்கு முன்பே கருவுற்றால் அப்பெண்னை கல்லால் எறிந்து கொல்வது வழக்கம.; இதனை அறிந்திருந்தும் வானதூதர் இறைவனின் விருப்பத்தை அறிவி;;க்கும் பொழுது "நான் கன்னி, இது எப்படி நிகழும்?" என வினா எழுப்பி ஐயத்தைப் போக்கிக் கொண்டாள். இதனையே*

*ஆண்டவருக்கு நானடிமை அவர்*
*சொன்னபடியே ஆகட்டும்*
*ஈண்டு மரியா சொன்னவுடன் வான*
*தூதர் அகன்றார் கும்மியடி*
*(அருள்மொழிக்கும்மி ப.31 பா.61)*

*நீண்ட பயணம் செய்து மலைப்பகுதியில் வாழ்ந்த உறவினளான எலிசெபெத் அவர்களுடன் மூன்று மாதம் தங்கி பணிவிடை புரிந்தாள். தூய ஆவியால் நிரப்பப்பட்டு புரட்சிக்கரமான பாடலை பாடுகின்றாள். இன்றளவும் இப்பாடல் "கன்னிமரியின் புகழ்ச்சிப்பாடல்" எனப்படுகிறது. மேலும்*

*வானத் திருந்துமன்னா மலையி லிருந்து தண்ணீர்*
*மக்கள் கேட்டவுடன் தந்தாய்*
*வானத் திருந்திறங்கி மண்ணி லுருவெடுத்து*
*மரியின் மகனெனத்தான் பிறந்தார்*
*வானத் திருக்குழந்தை வடிவிற் சிறந்தகலை*
*வாழ்க்கை நலம் பெறவே வாழ்த்தி*
*வானத் திருந்துமழை மலராய்ப் பொழிந்தருள்ள*
*வாழ்வோர் வணங்கிவரும் இறையே*
*(இயேசுபிரான் பிள்ளைத்தமிழ் ப.17 பா.5)*

*இப்பாடலில் வானத்திலிருந்து மன்னாவை பொழிந்து மக்களின் பசியைப் போக்கி, மலையிலிருந்து தண்ணீரை தந்து தாகத்தை தீர்த்து, மக்களின் குறையை போக்கிய இறைவனை மகனாக பெற்றெடுத்த புரட்சிப்பெண் கன்னிமரியா.*

*15. தூய ஆவியால் நிரப்பப்பட்டவள்:*

*இயேசு உயிர்த்து வி;ண்ணகம் சென்றபின்பு கன்னி மரியாள் சீடர்களுடன் இணைந்து செபத்தில் நிலைக்கும் பொழுது தூய ஆவியானவர் கன்னி மரியாளையும் சீடர்களையும் அர்ச்சிக்கின்றார் நிரப்புகின்றார். இதனையே,*

*ஆவியார் இவர்கள் எல்லாரும்*
*ஆற்றலில் செயல்படச் செய்தாரே*
*பாவிகளுக்கு ஈடேற்றம் அருளாசியென்று*
*பாரெங்கும் கிறித்தவம் பரவியதே*

*(அருள்மொழிக்கும்மி ப.63 பா.125)*

*மேலும் தூய ஆவியால் நிரம்பிய கன்னிமரி சீடர்களை உறுதிப்படுத்துகிறார். நற்செயல்கள் செய்யத் தூண்டுகிறார். இதனையே*

*அன்னைமரியம் சீடரும் சேர்ந்து*
*ஆண்டவர் வார்த்தை அறிவித்தனர்*
*நன்மை புதுமைகள் எங்கும் நிகழ்வதை*
*மக்களும் கண்டு வியப்புற்றனர்*
*(அருள்மொழிக்கும்மி ப.63 பா.126)*

*என ஆசிரியர் மணிவளன் சுட்டிக்காட்டுகின்றார்.*

*16. துறவிகளின் அடைக்கலம்:*

*காயன் என்னும் அரசனால் கித்தேரி அம்மாள் சிறையில் அடைக்கப்படுகிறாள். சிறைச்சாலையை தனது தவத்தாலும், செபத்தாலும், அறச்செயல்களாலும், அறச்சாலையாக மாற்றுகின்றாள். அரசன் கித்தேரியம்மாளை கொலைக்குற்றத்திற்கு கட்டளை இட்ட போது கன்னிமரியாள் அங்கு பேரொளியுடன் தோன்றி வானதூதர்களும், புனிதர்களும், சூழ்ந்துவர கித்தேரி அம்மாளை அரவணைத்து, அவளுக்கு அணிகலன்கள் எல்லாம் பூட்டி, இறைவனை சந்திக்கும் மணமகளாக இருக்க உறுதிப்படுத்துகின்றாள். மரணத்தண்டனையை ஏற்றுக் கொள்ள துணைபுரிகின்றாள். இறந்த பின்பு அவளது ஆன்மாவை இறைவனிடம் அழைத்துச் செல்கின்றாள். பூமியிலே கித்தேரியம்மாளின் புகழை நிலைக்கச் செய்கின்றாள். இதனையே*

*என்றுயர்வா னின்றுவந்த இன்கமழ்பூ நீராட்டி*
*சென்றுயர்வா னோரிவட்கே தேவணிகள் பூட்டினரால்*
*(கித்தேரியம்மாள் அம்மானை ப.180 பா.34)*
*தன்பகைவென்று எவ்வுயிரும் தான்காத்த ஓர்படையாய்*
*உன்பகைவென்று ஓங்கவுநீ ஒண்படையீது ஆகுமென்றே*
*(கித்தேரியம்மாள் அம்மானை ப.182 பா.39)*
*பொன்னாழி பூவிரலிற் போட்டனபின் உன்சிலுவை*
*உன்னாழி நிற்பவுனக்கு ஓர்ந்தபகைக்கு அஞசாதே.*
*(கித்தேரியம்மாள் அம்மானை ப.182 பா.42)*
*ஆங்குளதாம் போர்க்களமும் ஆங்குமுடி பூண்டணிவாய்*
*பூங்குழலாய் போவெனத்தாய் போயொளித்தாள் அம்மானை*
*(கித்தேரியம்மாள் அம்மானை ப.183 பா.45)*

*என வீரமாமுனிவர் கன்னிமரியாள் துறவிகளின் அடைக்கலமாக திகழ்வதை கித்தேரியம்மாள் அம்மானையில் குறிப்பிடுகிறார். தவத்தில் சிறந்தோறும் முனிவர்களும் வணங்கி அணிந்துகொள்ளும் பாதங்களை உடையவளாக திகழ்கின்றாள் கன்னிமரி. விண்ணலக வாழ்வைக் காட்டுகின்ற மேன்மையான ஒளி பொருந்திய துறவிகளின் கண்ணாடியாகவும் தெரிகின்றாள்.*

*17.கன்னிமரிக்கு புகழ்மாலை:-*

*கிறித்தவ சிற்றிலக்கியங்கள் அன்னை மரியின் பண்பு நலன்களையும், வாழ்க்கை வரலாற்றினையும், அவள் புரிந்துவரும் எண்ணற்ற அற்புதங்களையும் போற்றி பல்வேறு நூல்களும் புகழ்மாலையும் வெளியிட்டு வருகின்றன. இதனையே திருக்காவலூர் கலம்பகம் இவ்வாறு கன்னிமரியின் புகழைப் பாடுகிறது. "விண்ணவர் வணங்கும் இறைமகளே! விண் ஒளியே! வாழ்க! உலக மக்களுக்கு உயிரே! நீ வாழ்க! இறைமகனைப் பெற்றாய் நீ வாழ்க! நீதியை*

*நிலை நாட்டினாய், கதிரவனை ஆடையாக அணிந்தாய், ஒளியுள்ள விண்மீன்களை முடியாகச் சூடினாய், இளம்பிறை நிலவைப் பாதக்குறடாக அணிந்தாய், திருமறை அறிவை நெறியாகக் கட்டளையிட்டாய,; உலகத்தைக் காத்தாய், துன்பத்தை நீக்கினாய், விண் வீட்டின் கதவானாய், நிலைபேறு தருவதில் மனம் இளகினாய், விண்ணவரை மகிழ்வித்தாய், இழிந்தவர்களுக்கு அருள் காட்டினாய், வணங்குவோரின் மனத்துள் வாழும் ஒளியாவாய், அழுகின்றவரின் உள்ளத்திற்கு ஆதரவு அளிக்கின்றாய்" (திருக்காவலூர் கலம்பகம் ப.88)*

*முடிவுரை*

*சமூகத்தில் முக்கியமாக தமிழ்ச்சமூகத்தில் பெண்ணின் நிலை மிக உயர்வாக பார்க்கப்பட்டு வந்துள்ளது. தந்தை வழிச்சமூகம் நிலை பெறுவதற்கு முன் தாய் வழிச்சமூகம் சிறப்புப்பெற்றிருந்தது. தமிழ் பண்பாட்டு பின்னணியில் எழுதப்பட்ட இலக்கியங்களிலும் கன்னிமரியின் பெண்மையை, தாய்மையை, பிறப்பின் மேன்மையை, வாழ்வியல் மதிப்பீடுகளை, மிகவும் அழகாகவும், ஆழமாகவும் எடுத்தியம்புகின்றனர் புலவர்களும் சான்றோர்களும். ஒரு பிள்ளையை வளர்க்க தாய் எவ்வளவு முக்கியமோ அதுபோன்று மனுக்குலத்திற்கும் கன்னிமரி இன்றியமையாதவளாகின்றாள். கிறித்துவச் சிற்றிலக்கியங்கள் கன்னிமரியினை கடவுளின் பரிசாகவும், இயேசுவின் தாயாகவும், தூய ஆவி நிரம்பிய ஆலயமாகவும், மனித குலத்தை வளமையான வாழ்விற்கு இட்டுச்செல்லும் ஞானப்பெண்ணாகவும், தீமையை நசுக்கும் வல்லமைபொருந்தியவளாகவும் அற்புதங்களையும் அதிசயங்களையும் தன்னை நம்பியவர்களுக்கு நிகழ்த்துபவளாகவும், ஆன்மாவை தேற்றுபவளாகவும், அமல உற்பவியாகவும், தெய்வநிலைக்கு உயர்த்தி, வாழ்த்திப் போற்றுவதை யாராலும் மறுக்க இயலாது. கன்னிமரியின் இறுதிக்காலத்தைப் பற்றி எதுவும் இலக்கியங்களில் குறிப்பிடப்படவில்லையென்றாலும் அவள் ஆன்மாவோடும் உடலோடும் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விண்ணுலக அரசியாக திகழ்கின்றாள் என கிறித்துவச்சிற்றிலக்கியங்களும் திருச்சபைக் கோட்பாடுகளும் உறுதியாக கூறுகின்றன. சாதி, மதம், மொழி, இனம் என எந்த வேறுபாடும் இல்லாமல் அனைவருக்கும் நன்மை செய்து கொண்டு உலகைக் காத்து, உயிர்களின் தாயாகி, புதிய ஏவாளாக சித்தரிக்கப்படுகின்றாள். "எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே" என்று அவள் பாடிய பாடல் முற்றிலும் பொருத்தமானதே! என இலக்கியத்தில் கன்னிமரி என்னும் இவ்வாய்வுக் கட்டுரை கன்னிமரியாளைப் பற்றிய புரிதலை முன்வைக்கின்றது.*

**பார்வை நூல்கள்**

*1.குமரிச்செழியன், 2018, ஞான நொண்டி நாடகம், சாரதா பதிப்பகம், ஜி-4, சாந்தி அடுக்கம், 3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம், ராயப்பேட்டை, சென்னை-14*

*2.சுந்தரராசன்.சே, 2009, திருக்காவலூர் கலம்பகம், முல்லை நிலையம், பாரி நிலையம், 90 பிராட்வே, சென்னை - 600 108*

*3.சுந்தரராசன்.சே, 2015, கித்தேரியம்மாள் அம்மானை. முல்லை நிலையம், 9, பாரதி நகர், முதல் தெரு, தியாகராய நகர், சென்னை - 600 017*

*4.சுந்தரரசன்.சே, 2009, பெத்லகேம் குறவஞ்சி, முல்லை நிலையம், பாரி நிலையம், 90, பிராட்வே, சென்னை - 600 108*

*5.செல்லத்துரை அருள் பாவலர், 1985, இயேசுபிரான் பிள்ளைத் தமிழ், இரண்டாம் பதிப்பு, எண் 255, எசு1, முன்றாம் முதன்மைச் சாலை, வெங்கடராமன் நகர், அசுதினாபுரம், சென்னை - 600 064*

*6.அருள்தந்தை முனைவர் சி.மணிவளன், 2017, அருள்மொழிக்கும்மி, தென்பொதிகைத் தமிழ்ச்சங்கம், 86, மேலரத வீதி, எட்டையபுரம் - 628 902*

*7.ம.ஜோயல் டேவிட்சன், 2017, திருக்குமரன் அந்தாதி, மோரியா ஊழியங்கள், அஞ்சல் பெட்டி எண் 7193 31133, தண்ணீர் தொட்டிசாலை, எம்.எம்.டி.ஏ. குடியிருப்பு, அரும்பாக்கம், சென்னை - 600 108*

*8.திரு.வி.கலியாணசுந்தரனார், கிறிஸ்துவின் அருள்வேட்டல், முல்லை நிலையம், 9 பாரதி நகர் முதல்தெரு, தி.நகர், சென்னை - 17.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********